Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

# ஸ்ரீ தத்தாத்ரேயர்

## ஸ்தோத்திரங்கள்




தொகுப்பாசிரியர்: வீ. கி. கோபாலன்

CC-0. In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

# ஸ்ரீ தத்தாத்ரேயர் ஸ்தோத்திரங்கள்

தொகுப்பாசிரியர்

**வீ.கி. கோபாலன்**

धर्मो रक्षति रक्षितः
GIRI
SINCE 1951
FOR INDIAN CULTURE & TRADITION

# கிரி

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

Book Name : Sri Dattatreyar Stothirangal
Language : TAMIL
Copyright : GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
Edition : 1st, October 2007
Pages : 128
Price : Rs. 25.00
ISBN No. : 81-7950-433-6
Book Size : Crown
Paper : Maplitho
Typesetting,
Wrapper Design,
Published by : GIRI TRADING AGENCY PRIVATE LIMITED
*Regd. Office* : Modi Niwas, Opp.Post Office, Matunga, Mumbai - 19. © (022) 2414 1344
*Admn. Office* : 134 (58/2), T.S.V. Koil Street, Mylapore, Chennai - 4. © (044) 2464 3551

All rights reserved. This book, or parts thereof, may not be reproduced in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the Publisher.

***Our Branches:***

**MUMBAI**

**DOMBIVILI (E)** : (i) 6, Arjun Co-operative Housing Society, Shiv Mandir Road, Ram Nagar, Near Sagar Dairy, Mumbai - 421 201.© (0251) 286 1890, (ii) Seva Dham "A" Wing, Shripal Nagar, Rajaji Path, Opp. Madrasi Mandir, Thane Dist. 421 201.© (0251) 244 9585
**GOREGAON (W)** : 2, Siddhi Vinayak Apts, Bangur Nagar, Mumbai-400 062. © (022) 2876 7298
**NERUL** : S.I.E.S. Engineering & Computer College Complex, Anjaneyar Temple, Navi Mumbai - 400 706. © (022) 3252 2491

**CHENNAI**

**MYLAPORE** : 14 (Old 10), Kapaleeswarar Sannadhi Street-600 004. © (044) 2464 0376
**NANGANALLUR** : 14 (Old 8), 10th Street, Near Raghavendra Temple-600 061. © (044) 2231 1735
**ADYAR** : Sri Anantha Padmanabhaswamy Temple, No.2, IInd Main Road, Gandhi Nagar-600 020. © (044) 2445 1976
**KANCHIPURAM** : (i) 5&146-B, Kamakshi Amman Sannadhi Street-631 502. © (044) 2722 4415, (ii) 68, Ekambaranathar Sannadhi Street-631 502. © (044) 2723 4414

**OTHER CITIES**

**COIMBATORE** : F6, T.M.House, 92, Thiruvenkatasamy Road, R.S.Puram-641 002. © (0422) 254 1523
**MADURAI** : 15, North Tower Street, (Opp. Mottai Gopuram)-625 001. © (0452) 262 8090
**SECUNDERABAD** : Sri Subramanya Swami Devalayam, Padmarao Nagar, Skandagiri-500 061. © (040) 2750 3046
**BANGALORE** : 23/3, 5th Cross, Sampige Road, Malleswaram-560 003 © (080) 2356 3001

***E-mail : sales@giri.in*** ***Website : www.giri.in***

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

# பொருளடக்கம்


## (அ) பகுதி 1 தத்தாத்ரேயர் வரலாறு-வழிபாடு

1. தத்தாத்ரேயர்- தோற்றம் ---------------------------- 7
2. தத்தர் அவதார நிகழ்வு- ஒரு தத்துவ விளக்கம் --- 16
3. தத்தர் குருவாக வரித்த 24 பெயர்களும், அவர் உணர்ந்த உபதேசங்களும் ---------------------------- 17
4. தத்தாத்ரேயர் உபாசனை ---------------------------- 22
5. ஸ்ரீ தத்தரின் உபாஸகர்கள் யாத்திரை செல்லும் புண்ணிய க்ஷேத்திரங்கள் ---------------------------- 23
6. ஸ்ரீ தத்தாத்ரேயர் பெருமை கூறும் நூல்கள் -------- 26
7. ஸ்ரீ தத்தாத்ரேயர்- தகவல் துளிகள் ---------------- 27

## (ஆ) பகுதி 2 தத்தாத்ரேயர் தோத்திரங்கள்

1. தத்தாத்ரேய காயத்ரீ ---------------------------- 30
2. ஸ்ரீ தத்த பாதுகா ஸ்தோத்ரம் ---------------------------- 30
3. ஸ்ரீ குரு தத்த ஜெய லாபாதிகர ஸ்தோத்ரம் -------- 31
4. ஸ்ரீ தத்த பஞ்சர: ---------------------------- 32
5. ஸ்ரீ அநசூயா த்யானம் ---------------------------- 33
6. நாரத முனிவர் இயற்றிய தத்தாத்ரேய ஸ்துதி ------- 33
7. ஸத்குரு த்யானம் ---------------------------- 35
8. கோர கஷ்டோத்தரண ஸ்ரீ தத்த ஸ்தோத்ரம் ------- 35
9. த்யானம் ---------------------------- 36
10. ஸ்ரீ ப்ருகு விரசித ஸ்ரீ தத்த ஸ்தோத்ரம் -------------- 37


CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

11. ஸ்ரீ தத்த ஸ்தோத்ரம் ---------------------------- 39
12. குரு வணக்கம் (மராத்தி மொழி) ---------------- 40
13. ஸ்ரீ தத்த ஹ்ருதயம் ---------------------------- 40
14. தத்த ஸ்தவராஜ: --------------------------------- 43
15. ஸ்ரீ தத்தாத்ரேய மாலா மந்த்ரம் ------------------ 48
16. தத்தஸ்தவன ஸ்தோத்ரம் ------------------------- 49
17. நக்ஷத்ர மாலிகா ஸ்தோத்ரம் ----------------------- 50
18. ஸ்ரீ தத்தாத்ரேய ப்ராத: ஸ்மரண ஸ்தோத்ரம் ------- 52
19. ஸ்ரீ தத்தாத்ரேய ஸ்தவம் ------------------------- 53
20. ஸ்ரீ தத்த நவரத்ன மாலிகா ---------------------- 55
21. ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஸரஸ்வதி அஷ்டகம் --------------- 56
22. ஸ்ரீ குருநாத அஷ்டகம் -------------------------- 58
23. ஸ்ரீ தத்தாப்ரார்தனா சதுஷ்கம் --------------------- 60
24. குருவர ப்ரார்தனா பஞ்சரத்ன ஸ்தோத்ரம் --------- 61
25. குரு ப்ரதக்ஷிணம் (மராத்தி) ---------------------- 63
26. ஸ்ரீ தத்தாத்ரேயாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம் - 64
27. ஸ்ரீ தத்தாத்ரேய அஷ்டோத்தர சத நாமாவளி ----- 66
28. ஸ்ரீ தத்தகுரு கருணாஷ்டகம் -------------------- 70
29. ஸ்ரீ குரு ஸ்தோத்ரம் ------------------------------ 72
30. ஸ்ரீ தத்தாத்ரேய ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் -------- 73
31. ஸ்ரீ தத்த ஸஹஸ்ர நாமாவளி --------------------- 87
32. தத்தாபராத க்ஷமாபண ஸ்தோத்ரம் ------------- 124

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

# பதிப்புரை

நமது ஸனாதன தர்மசாஸ்திரங்களில், எல்லாம் வல்ல பரம்பொருள் ஒருவரே என்றும், அவர் பல ரூபங்களில் நம்மிடையே அவதரித்து நம்மை உய்வித்து, தர்மத்தை ரக்ஷிப்பதற்காக பஞ்ச க்ருத்யங்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், ஆகிய ஐந்தொழில்களையும் புரிகிறார். எனவும் சொல்லப்பட்டுள்ளது. இவ்வரிய செயல்களை செய்யும்போது பரம்பொருளே த்ரிமூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, ஈசன் ஆகியோராக விளங்குகிறார். இம் மூர்த்திகள் மூவரும், ஒருவராய் சேர்ந்து அவதாரம் எடுத்தவரே ஸ்ரீ தத்தாத்ரேயர்.

ஆதி குரு எனப்படும் இவரே நம்மிடையே அப்போதைக் கப்போது பாவசிந்தனைகள், தோன்ற விடாமல் தடுத்து, நமக்கு அருளாசி வழங்குபவர் என்பது, ஸ்ரீ தத்தாத்ரேயரை தியானித்து உபாசனை செய்து வரும் ஆயிரமாயிரம் பக்தர்களின் அனுபவம்.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்ப்பினும்
அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"

எனும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, மெய்ப்பரம் பொருளாகிய "ஸ்ரீ தத்தாத்ரேயர் ஸ்தோத்திரங்கள்" எனும் இந்நூலில் வரலாறு, வழிபாட்டு முறைகள், ஸ்தோத்திரங்கள் ஆகியவற்றை, ஸ்ரீ தத்த உபாஸகர் ஸ்ரீ வீ.கி.கோபாலன் அவர்கள், பல்வேறு ஆதார பூர்வமான க்ரந்தங்களிலிருந்து தொகுத்து வழங்கியிருக்கிறார். கடந்த அரை நூற்றாண்டு களுக்கும் மேலாக இறைபணியில் தொண் டாற்றும் கிரி பதிப்பகத்தாரால் எல்லோரும் பயனடையும் பொருட்டு இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

தத்தாத்ரேயரை வழிபடும் அன்பர்கள் இதனை வாங்கிப் படித்து குருநாதரின் பரிபூரண அருளுக்கு பாத்திரமாகும்படி வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

## காஞ்சி பரமாச்சாரியார்-
### (தெய்வத்தின் குரல்-பாகம்-7) - கருத்து
## குரு சிஷ்ய உறவு—

"…. தத்தாத்ரேயர் ரொம்ப பெரியவர். வேதாந்தத்திலும் குரு. ஸ்ரீ வித்யா ஸம்ப்ரதாயத்திலும் குரு. யோக ஸித்தர்களுக்கும் குரு என்று இருப்பவர். த்ரிமூர்த்தி ஸ்வரூபமானவர்….."

"…. நம்முடைய(அத்வைத) ஸம்ப்ரதாயத்தின் ஆதி ப்ரவர்த் தகர்களிலேயே ஒருத்தர் தத்தாத்ரேயர். காமாக்ஷி அம்பாள் கோயிலிலிருக்கும், ஆசார்யாள் ஸந்நிதி விமானத்தில், பூர்வாசார்ய பரம்பரையில் வந்த அத்தனை பேருக்கும் பிம்பங்கள் இருக்கின்றன. அதிலே எல்லாருக்கும் மேலே 'டாப் பிலே- தக்ஷிணாமூர்த்தியா என்றால் இல்லை.( நம்முடைய குரு-பரம்பரா) ச்லோகம் ' 'நாராயணம் பத்மபுவம்' என்று ஆரம்பிக்கிறதே, அந்த நாராயணரா என்றால் அவரும் கீழ்வரிசை தான்.' டாப்' பில் இருக்கிறவர் தத்தாத்ரேயர் தான்! அவருடைய வாக்கு என்றால் கனம் ஜாஸ்திதான்".

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

# தத்தாத்ரேயர் - வரலாறு

## 1. தோற்றம்

"ஸ்வாமின்! தேவேன தத்தம்" என வெளியிலிருந்து அப்போது தான் ஆச்ரமத்திற்குள் நுழைந்த அத்ரி முனிவரிடம் கூறுகிறாள், அநசூயா.

அன்றாட மதிய நேர அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு தமது குடிலுக்குள் வந்த முனிவர், அங்கே விரித்திருந்த தர்ப்பை ஆசனங்களில் வெகு சமர்த்தாக மலங்க மலங்க விழித்துக் கொண்டு படுத்திருந்த மூன்று பச்சைக் குழந்தைகளைப் பார்க்கிறார். அவரது வரவை எதிர்பார்த்துக் காத்திருந்த அவர் மனைவிதான், "சுவாமி! இறைவன் தந்தது!" எனக் கூறுகிறாள்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


சலனமற்ற அவளது முகத்தையும், மூன்று மதலைகளையும் கண்ணுற்ற அத்ரி முனிவர் ஒரு கணம் சிந்திக்கிறார். தவ வலிமையால் அவரது மனக் கண் முன்னே குடிலில் நடைபெற்ற விஷயங்களும் அந்த நிகழ்வின் பின்னணியும் தெளிவாகத் தெரிகின்றன...

பின்னர்-

கீழே கிடந்த குழந்தைகளைப் பார்த்து, ''மும்மூர்த்திகளே!' இது என்ன விளையாட்டு?'' எனப் பணிவாக வினவினார்.

## நடந்தது இதுதான்-

சப்தரிஷிகளில் ஒருவரான அத்ரிமுனிவர்-அநசூயா தம்பதிகள் தனித்து வாழ்ந்து, 'ஒரு தவமுனிவரும், அவரது மனைவியும் எப்படி இருக்கவேண்டும்'' என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்து வந்தனர். ஒருமித்த கருத்தும், பரஸ்பர நம்பிக்கையும் கொண்டு அன்பின் ஆதாரத்தை அடிப்படையாக அமைத்த ஆதர்ச தம்பதியர், இவர்கள். குடிலுக்கு அவ்வப்போது விஜயம் செய்யும் அதிதிகள், இந்த அற்புத ஜோடியின் கடமை ஆற்றும் திறனை வியந்த வண்ணம் சென்றனர். குடும்பப் பெண்ணாக, கணவரின் குறிப்பறிந்து பணிவிடை செய்த அநசூயை, வரும் விருந்தினர்களையும் ஒரு தாயுள்ளத்தோடு பரிவுடன் உபசரித்து விடை தருவாள்.

தனது பதியிடம் பக்தியுடன் இணைந்த பற்று, ஆசைகள் அற்ற நிச்சலனமான மனநிலை, ஆசிரமத்திற்கு வருபவர் முகம் கோணாமல் இனிமையாகப் பேசும் பாங்கு இவை அனைத்தும் ஒருங்கே கூடி உத்தமியாகத் திகழ்ந்த அநசூயையின் புகழ், வான் உலகில் தேவேந்திரனை அசூயைப் பட வைத்தது.

மிகவும் நல்லவரைக் கண்டால் எப்போதுமே தேவர்கள் தலைவனுக்குப் பொறுக்காது! எல்லாம் பதவி ஆசைதான். 'அமர்ந்திருக்கும் பதவிக்குப் போட்டியாக வந்து விடக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection ,Sholinganallur, Chennai


கூடாது என்ற பயம் அமரர் உலகிற்கும் உண்டு' என்பதை முன்பே பல புராணக்கதைகள் பதிவு செய்துள்ளன.

எனவே பிரம்மா, விஷ்ணு, மகேசன் என்ற மும்மூர்த்திகளிடம் சென்று முறையிட விழைந்தான். இருந்தாலும், 'தனது பதவிக்கு மட்டும் ஆபத்து' என்று கூறினால், அவர்கள் பொருட்படுத்த மாட்டார்களோ என்ற தயக்கம் வேறு!

எனவே சமயோசிதமாகத் தனது அச்சத்தை வெளிப் படுத்தினான்–" வரம் பெற்று வந்தவள் போல் வாழும் இந்த வனிதையால், பிற்காலத்தில் வானவர்கள் அனைவருமே துன்பம் அடைய வாய்ப்புள்ளது. எனவே, ஏதேனும் உபாயம் செய்து, அநசூயையை தர்மம் பிழறச் செய்ய வேண்டும், இல்லை யென்றால், நாம் அனைவருமே அவளுக்குச் சேவகர்களாகப் பணிபுரிய நேரிடும்!" என்றான்.

மும்மூர்த்திகளுக்கு உண்மை நிலை தெரியாதா? இருந்தாலும், 'ஒரு உயர்நடத்தை கொண்ட பெண்ணின் பெருமையை, அந்த மங்கையர்கரசியிடம் மறைந்திருந்த அபரிமிதமான சக்தியை அகிலமே அறிந்து போற்றும் காலம் வந்துவிட்டது!" என்பதை அவர்கள் உணர்ந்தனர், எனவே, தேவர் தலைவன் சொற்படி நடக்க ஒப்புதல் அளித்தனர்.

ஒரு நாள் மதிய நேரம். அத்ரிமுனிவர், தமது அநுஷ்டானங்களை மேற்கொள்ள குடிலுக்கு வெளியே சிறிது தொலைவில் அமைந்துள்ள நீர்நிலைக்குச் சென்றிருந் தார். அப்போது, மும்மூர்த்திகளும், அதிதிகள் உருவம் தரித்து, ஆசிரம வாயிலில் வந்து நின்று உணவு வேண்டினர்.

' வயிற்றுப் பசி' எனக் கூறி வந்தவர்களை அநசூயை முறைப்படி வரவேற்று, குடிலுக்குள் வந்து அமருமாறு வேண்டினாள் . தனது கணவர் மதிய அநுஷ்டானங்களைப் பூர்த்தி செய்து திரும்பியவுடன் உணவு பரிமாறுவதாகக் கூறி, சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொள்ள விநயத்துடன் விண்ணப்பம் விடுத்தாள். மேலும் " உங்களுக்குப்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


பிடித்தமான உணவுப் பதார்த்தம் ஏதேனும் வேண்டுமானால் தயங்காமல் கேளுங்கள்–அதையும் தயார் செய்து விடுகிறேன்'' என்றும் கூறினாள்.

'' நாங்கள் மூவரும் வெகு தொலைவிலிருந்து வருகிறோம், பசி தாங்க முடியவில்லை! முனிவர் வரும்வரை காத்திருக்க இயலாது. எனவே இப்போதே எங்களுக்கு உணவை வழங்கிவிடு'' - என வந்த அதிதிகள் அவசரப்படுத்தினர்.

ஆயிற்று, அதிதிகள் மூவருக்கும் இலை போட்டு, ஆசனமிட்டு அமர வைத்தாள், அநசூயை.

'' இதோ உங்களுக்கான ஆகாரங்களை எடுத்து வந்து விடுகிறேன்'' எனச் சொல்லி நகர்ந்தவளை, அம்மூவரில் ஒருவர் தடுத்துப் பேசினார்,

''வந்தவர் இச்சைப்படி சமைத்துப் பரிமாறுவதாகப் பேசினாய் அல்லவா? நாங்கள் விரும்புவதெல்லாம் இலையில் உணவுப் பொருள்களை பரிமாறும் போது உனது உடலில் உடை எதும் இருக்கக் கூடாது!''

விசித்திரமான வேண்டுகோளைக் கேட்டபடியே அநசூயை, ஒரு ஓலைத் தடுப்புக்கு பின் இருக்கும் சமையல் பகுதிக்குச் சென்றாள். அமைதியான ஒரு மனநிலையோடு, அத்ரி முனிவரைத் தியானம் செய்து வணங்கினாள். ''அதிதிகள் எனது குழந்தைகள்'' என்ற எண்ணம் அப்போது அவளது உள்ளத்தில் பளிச்சிட்டது! பசி என்று வந்தவர் முகம் கோணாமல் நடக்க எனது பதியின் தவவலிமை துணையிருக்கட்டும்' என்று வேண்டிக் கொண்டே தனது உடைகளைக் களைந்தாள். அப்போது,

ஓலைத்தடுப்புக்கு மறுபுறம் பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல் ஓங்கி ஒலித்தது! வந்து பார்த்தால் விருந்தினர், மூவர் அமர்ந்திருந்த ஆசனங்களில் அழகான மூன்று சின்னக் குழந்தைகள்! கைகால்களை அசைத்தும் உதைத்தும் வீரிட்டு அழுது கொண்டிருந்தன., முன்பு வந்தவர்களைக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


காணவில்லை - அந்தப் பசி அழுகைக்கு ஒரு அன்னையின் அன்பும் அரவணைப்பும் அவசியம் தேவைப்பட்டது. அந்தப் பொறுப்பை ஏற்று, நிர்மலமான மனத்தோடு மதலைகளின் பசி தீர்த்தாள், அன்னை அநசூயை!

தரையில் கிடந்த பாலகர்களைத் தமது தவத்திற்குக் கிடைத்த அங்கீகாரமாகக் கருதினார், அத்ரி முனிவர். அந்த மும்மூர்த்திகளையும் தனது குழந்தைகளாகவே ஏற்றுக் கொண்டு விட்டார். பிரம்ம தேவரின் மானச புத்திரரும், ஸப்த ரிஷிகளில் ஒருவருமான அத்ரிமுனிவர் வம்சம், ஆத்ரேயர் என்னும் சிறப்புப் பெயருடன் விளங்க, ஸ்ருஷ்டி-ஸ்திதி-ஸம்ஹாரம் என்னும் முத்தொழிலுக்கும் காரணமான மூலப்பொருள், அந்த வம்சத்தின் முதல் முன்னோடியாக தத்த-ஆத்ரேயர் உதித்தது இப்படித்தான்.

★★★★

''மும்மூர்த்திகளே! இது என்ன விளையாட்டு?'' எனக் கேட்டு நின்ற முனிவர் முன்னே பிரம்மா, விஷ்ணு, மகேசன் மூவரும் தமது சுய உருவங்களுடன் காட்சி தந்தனர். முகத்தில் முறுவலுடன் மல்லாந்து படுத்திருந்த மூன்று மழலைகளும் மறைந்து விட்டன.

அத்ரிமுனிவரும், அவரது அன்பு மனைவி அநசூயையும் சேர்ந்து பக்திப் பெருக்குடன் அந்த ஆதிமூல வடிவங்களை வணங்கி ஆராதித்தனர்.

அப்போது அந்த அயன்-அரி-அரன் மூவரும் அத்ரி-அநசூயை தம்பதிகளை ஆசீர்வதித்தனர். பின்னர் அநசூயைப் பார்த்து, ''அம்மா! உண்மையாகவே தங்களைத் தாயாக அடைய நாங்கள் பெருமைப் படுகிறோம். அதற்கான ஒரு வாய்ப்பு மீண்டும் எங்களுக்கு விரைவிலேயே கிடைக்கும்' எனக் கூறி மறைந்தனர்.

அவர்களது அருளாசியால் காலப்போக்கில்,அத்ரி அநசூயை தம்பதியருக்கு மூன்று குழந்தைகள் அடுத்தடுத்துப் பிறந்தன. பிரம்மனின் ஆசியில் சந்திரன், ருத்ரனின் ஆசியில்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai



துர்வாஸர், மற்றும் பிரம்மா-விஷ்ணு-மகேசன் மூவரின் ஒருங்கிணைந்த அம்சமாக தத்தாத்ரேயர் அவதரித்தனர். இறை நாடகத்தின் அடுத்த கட்டமாக சந்திரன், சந்திர உலகத்திற்கும், துர்வாஸர் தவத்திற்கும் சென்று விட்டனர். சிறிது காலம் பெற்றோருடன் இருந்த தத்தாத்ரேயர், உலக நியதிப்படி முதலில் தந்தையைக் குருவாக ஏற்று, பல விஷயங்களைக் கற்றார். பின்னர், தமது வழியில் தகுந்த குருவைத் தேடிச் சென்றார்.

இறைவன் படைப்பில் உள்ள பஞ்ச பூதங்களும் மற்ற ஒவ்வொரு உயிரினமும் அவருக்குப் பல அரிய விஷயங் களையும் தத்துவங்களையும் உணர்த்தின.

'உலகில் எதையும் எவரையும் உதாசீனப்படுத்தாது உன்னிப்பாக கவனித்து நல்லதையே ஏற்றுக் கொண்டால் அழிவில்லாத அமுதநிலைக்கு ஆன்மாவை உயர்த்தலாம்' என்ற உண்மையைக் கண்டறிந்தார், உரியவருக்கு உபதேசமும் செய்தார், 24 வகையான உபதேசங்களை அவர் பெற்றார்.

★★★★

மேற்கூறிய புராண நிகழ்வுகள், வெவ்வேறு விதமாக வடிவமைக்கப்பட்டு வழங்கி வருகின்றன. இதில் ஒரு சாரார், தேவேந்திரனுக்குப் பதிலாக நாரதரை மையப்படுத்திப் பேசி வருகின்றனர்.

நாரதரின் தூண்டுதல், 'முத்தேவரின் மனைவியரை அநசூயை மேல் பொறாமைப் பட வைத்தது' என்றும் அவர்கள் தத்தமது கணவரிடம், 'அநசூயையின் பதிபக் தியைச் சோதிக்க வேண்டி வேண்டுகோள் விடுத்தனர்' என்றும் கதைவிரிகிறது. மும்மூர்த்திகளும் இதனை ஏற்று. காசியிலிருந்து தென்திசை நோக்கிச் செல்லும் வழியில் நடந்து வருவதாகக் கூறும் யாத்திரீகள் உருவில் அத்ரி முனிவர் ஆச்ரமத்தை அடைவதாகவும் வடிவமைத் துள்ளனர். கதைதான் என்றாலும் 'இறைத் தேவியர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பொறாமைக் குணம் படைத்தவர்' எனும் கூற்றை ஏற்க முடியவில்லை.

★★★★

நிகழும் வைவஸ்வர மன்வந்தரத்தின் முதல் சதுர்யுகத்திலேயே திரேதாயுகத்தின் ஆரம்ப காலத்தில், முன் சொன்ன தத்தாத்ரேயர் அவதாரம் நிகழ்ந்ததாகப் புராணம் கூறுகிறது. வாய்வழியாகக் கூறப்பட்டு வந்த பல புராணக் கதைகள், கூறுபவரின் கற்பனை வளம் மற்றும் மனோபாவத்தை ஒட்டி மாறுபடுவது நமக்குப் புதிதல்லவே!

★★★★

குருவைத் தேடிச் சென்ற தத்தாத்ரேயர் நாநிலம் முழுவதும் திரிந்து வந்தார். யோகப் பயிற்சியின் வாயிலாகத் தமது தகுதிகளைப் பெருக்கிக் கொண்டார். இறை அம்சம் என்பதால், அனைத்து விஷய ஞானங்களும், சித்திகளும் இயல்பாகவே கூடி வந்தன.

தமக்கு உபதேசம் கிடைத்த அநுபவத்தை, "யதுமன்னன்" ஒருவனுக்குத் தத்தாத்ரேயர் விவரித் ததாக, ஸ்ரீமத் பாகவதத்தின் 11-வது ஸ்கந்தத்தில் காணப் படுகிறது. 'அவதூதப் பிராம்மணர் ஒருவர், யதுமன்னுக்கு உபதேசம் செய்தார்' என்ற குறிப்பை, 'அந்த இளவயதுத் தோற்றம் தந்தவர், தத்தாத்ரேயர் தான்' எனப் பல அறிஞர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர்

இங்கு ' அவதூத' என்ற சொல்லிற்கு சிறிது விளக்கம் தேவைப்படுகிறது. அவதூதன் என்ற சொல்லுக்கு அர்த்தமாக ' முற்றும் துறந்தவன்' மற்றும் ' நிர்வாண சந்நியாசி' என அகராதியில் பொருள் காண்கிறோம். மேலோட்டமாக, இந்த அர்த்தம் சரியாகத் தோன்றி னாலும், சற்று ஆழ்ந்து ஆராய முற்பட்டால், அபூர்வமான பொருள் செறிந்த சொல் இது என்பது தெரியும், இந்தச் சொல்லின் மூலம், சமஸ்க்ருத மொழி.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


அ - ஆனந்தத்தில் திளைப்பவர்

வ - வர்த்தமான காலத்தில், அதாவது நிகழ் காலத்தில் (சென்றதைப் பற்றிச் சிந்தனையின்றி, வரும் நாளைப் பற்றிக் கவலை கொள்ளாமல்) விழிப்புடன் செம்மையாகச் செயல்படுபவர்

தூ - ஞானத்தால் அஞ்ஞானத்தை வேரோடு தூர்த்துக் களைபவர்

த - தத்துவ சிந்தனை வயப்பட்டவர், மற்றொரு விளக்கம், இப்படி வருகிறது

அ - அக்ஷர தத்துவத்தை முழுவதும் அறிந்தவர்-சொல் லோடு செயலும் தெரிந்தவர்

வ - வரேண்யம் அதாவது வணக்கத்திற்கும் மதிப்பிற்கும் உரிய பூர்ணத்வம் பெற்றவர்

தூ - எல்லாவிதமான பந்தங்களையும் துண்டித்தவர் அல்லது தாண்டியவர்.

த - 'தத்வமஸி' என்னும் மகாவாக்கியத்தின் பொருளை, தான் அநுபவிப்பதுடன், மற்றவருக்கும்விளக்குபவர்.

அவதூதர், திகம்பரர் என்றால், ' ஆடையில்லாதவர் என்று கேவலமாக எண்ணக் கூடாது' என்பதற்காகவே இந்த விளக்கம். உலகியல் வாழ்க்கையில் நாட்டமில்லாமல், "தன்னை அறிந்து கொள்ள வேண்டும்" எனும் உயரிய நோக்குடன், சாதனையில் ஈடுபடும் சில சுத்த ஆன்மாக்கள், உடலையே ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள் என்பது தான் உண்மை நிலை.

அருணகிரிநாதர், தமது கந்தர் அநுபூதியில் முருகப் பெருமானை வேண்டி நின்ற " எல்லாம் அற என்னை இழந்த நலம்' என்பதும் இந்தத் தன்வயப்பட்ட அவதூத நிலையே!

★★★★

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


தத்தகிரி- சேந்தமங்கலம் - ( நாமக்கல் அருகே)

சமீபத்தில் சேந்தமங்கலம் தத்தகிரி சென்று தரிசனம் செய்யும் வாய்ப்பு குரு அருளால் கிட்டியது. சத்குரு சாந்தானந்த சுவாமிகளின் பெரும் முயற்சியின் விளைவாக எழுந்த கோயில் இது

மலை உச்சியில் தத்தாத்ரேயரின் கோயில். அதன் நேர்கீழே, சேந்தமங்கலம் சுவாமிகளின் சமாதிக் கோயில். அருகே கந்தப் பெருமானின் தனி சந்நிதி.

படிகளில் இறங்கிக் கீழே வரும்போது, நாம் காணுவது, பஞ்சமுக ஆஞ்சனேயர். அவர் எதிரே சனி பகவான்.

மண்டபத்தை வலம் வரும் போது, அடுத்து நாம் காண்பது, வன துர்க்கா பின்னர் ஐயப்பன், மற்றும் தக்ஷிணா மூர்த்தி, ஒவ்வொருவருக்கும் தனித்தனி சந்நிதிகள்.

கீழே பிரம்மாண்டமான பஞ்சமுக விநாயகர் அவருக்கு நேர் எதிரே ஆஞ்சனேயர்.

இந்தக் கோயில் வளாகத்தின் மிகவும் அருகில்- அடிவாரப் பகுதியில் உள்ளது, ஸ்ரீ தத்தாச்ரமம் . இங்கு, சேந்தமங்கலம் ஸ்வயம்ப்ரகாச அவதூத ஸ்வாமிகளின் மற்றொரு சிஷ்யரான ஸத்குரு ஸ்ரீ கிருஷ்ணானந்த பிரம்மேந்திர ஸரஸ்வதி அவதூத சுவாமிகளின் சமாதிக் கோயில் உள்ளது.

இங்கே, கோயில் வளாகத்தில் அத்திமரம் உள்ளது . இந்த ஔதும்பர விருக்ஷத்தை ஒட்டி, பாதச் சுவடு பதிந்த பாறை மற்றும் விநாயகர் கோயில். ராம நாம ஸ்மரணை தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கும், எளிமையான வளாகம். அனைவரும் தரிசித்து நிலையான ஆனந்தம் பெற ஒரு அருமையான வாய்ப்பு.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


## தத்தர் அவதார நிகழ்வு
## ஒரு தத்துவ விளக்கம்

உடலில் உள்ள ஆன்மா, அந்த சரீரத்தின் ஒத்துழைப்புடன் யோக சாதனையில் ஈடுபடுகிறது.

தியானத்தில் தனித்திருந்து. தன்வயப்பட்டு, சமாதி நிலையில் ஆன்மா விளங்குகிறது.

தன்னை மதிப்பாரின்றி மனம் தவிக்கிறது. தனது ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட சவாலாகச் சங்கடப்படுகிறது.

முக்குணங்களை முடுக்கி விடுவதில் முனைகிறது. உணர்வுகளை ஒதுக்கி நின்ற உடலைச் சலனப்படுத்தும் முயற்சி. உடலோ ஆன்மாவின் ஆதிக்கத்திற்கு மட்டுமே கட்டுண்டு இயங்க தன்னை பழக்கப்படுத்தி விட்டது. குணங்களின் வேறு வடிவங்களான சிருஷ்டி-ஸ்திதி-சம்ஹாரம், செயலற்று மழலைகளாகி விடுகின்றன.

| | | |
|---|---|---|
| இங்கு, ஆன்மா | - | அத்ரிமுனிவர் |
| உடல் | - | அநசூயா |
| மனம் | - | இந்திரன் |
| முக்குணங்கள் | - | சத்துவ-ரஜஸ்-தமஸ் |
| மறுவடிவம் | - | பிரம்மா-விஷ்ணு-மகேசன் |
| மழலைகள் | - | தத்த வடிவம் |

****

தத்தாத்ரேயர் இன்றும் சூக்ஷ்மமான யோக வடிவில் உலவி வருகிறார். தம்மை உபாசனை செய்யும் அடியார்களுக்கு இக-பர சௌபாக்கியங்களை அள்ளித் தருகிறார்.

அன்றாடம், நித்திய கர்மாக்களை மேற்கொள்ள தத்தர் யோகமார்க்கமாக பயணிக்கும் இடங்கள், இந்திய நாட்டின் வடகோடியிலிருந்து தெற்கு திசைவரைப் பரவியுள்ளன என்ற நம்பிக்கை உள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


மேலும், கி .பி 1000 ஆண்டிற்கு பின்னர்தான், தத்தாத்ரேயரை மூன்று முகங்களுடன் வடிவமைக்கும் வழக்கம் ஏற்பட்டதாகத் தெரிகிறது. அதற்கு முன் மும்மூர்த்திகளின் அம்சங்களைத் தன்னகத்தே அடக்கிய அத்ரி-அநசூயை மகனாக, ஒருமுகம் வடிவில் தான் வழிபாடுகள் நடந்தன. மகராஷ்டிர மாநிலத்தில், நாஸிக் நகரில் இந்த ஒருமுக தத்தாத்ரேயரின் கோயிலை இன்றும் காணலாம்.

உலகில் உள்ள அனைத்து மனிதரும் நல்லகதி அடையும்வரை தத்தாத்ரேயர் தரணியில் உலவி வருவார்.

-ஜெயகுரு தத்த-

## தத்தர் குருவாக வரித்த 24 பெயர்களும், அவர் உணர்ந்த உபதேசங்களும்

**1. ஆகாசம்** - உள்ளும் புறமும் எல்லா இடங்களிலும் வியாபித்து உள்ளது. பரமாத்மாவான இறைவனும் அப்படித்தான். மாற்றமில்லாத ஒரே நிலை, ஆண்டவனுக்கும் ஆகாசத்திற்கும் பொதுவானது.

**2. வாயு** - காற்று எல்லா இடங்களிலும் பரவிச் சென்றாலும், தான் தொட்டு நகரும் எந்தப் பொருளாலும் பாதிக்கப்படுவதில்லை. ஆத்ம சொரூபமும், சரீர குணங்களால் பாதிப்பு அடைவதில்லை.

**3. அக்னி** - ஒளி மயமானது. எதையும் விழுங்கும் வீரியம் வாய்ந்தது. ஆனால் மாசு அடைவதில்லை. ஞானியும் அப்படித்தான். செல்லும் இடங்களைத் தூய்மைப் படுத்துகிறான். நெருப்புக்குத் தனிப்பட்ட வடிவம் இல்லை. எரியும் பொருளின் உருவத்தைத்தான் பிரதிபலிக்கிறது. ஆத்மா-தான் புகுந்திருக்கும் சரீர உருவிலேயே தோற்றம் தருகிறது.

**4. நீர்** - பரிசுத்தம் அதன் இயல்பான இயற்கை நிலை. நன்மைகள் நல்குவது. உயிரினங்களின் அத்யாவசியத்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


தேவை எனும் வகையில், இனிமையானது. புண்ணிய தீர்த்தங்களில் உள்ள நீரைப் பார்ப்பதனால், போற்றுவதால், பக்தியுடன் நீராடுவதால் மனிதர்களைப் புனிதப் படுத்துகிறது.

உண்மையான ஞானி, இயல்பாகவே புனிதனாகவும் தன்னை அண்டுபவரைப் புனிதப் படுத்துபவனாகவும் விளங்குகிறான்.

**5. நிலம்** - பூமி, மனிதர்களால் எத்தனை விதமான தாக்குதல்களுக்கு ஆளாகிறது? வெட்டுதல், கிளர்தல், தோண்டுதல். தூர்த்தல் எனப் பலவகையிலும் துன்பம் தருகிறோம், ஆனால் அனைத்தையும் பொறுமையுடன் தாங்குகிறது. பயிர்களைவளரச் செய்கிறது. கனிமங்களையும் நல்குகிறது. தீங்கு செய்பவருக்கும் நன்மை தரும் பாங்கு!

**6. ஞாயிறு**- கதிரவன், பூமியில் உள்ள நீர்நிலை களிலுள்ள தண்ணீரை உஷ்ணத்தால் உறிஞ்சி, மேகமாகச் சேமித்து, மீண்டும் மழையாக நிலத்திலே பொழியச் செய்கிறான்.

தான் ஈட்டும் பொருளை மற்றவருக்கே தரும் கொடைத்தன்மை

**7. திங்கள்** - வளர்வதும், தேய்வதும் சந்திரனின் குணம் அல்ல. அந்தக் காட்சி, சூரிய ஒளி சந்திரன் மீது விழும் பகுதியின் பிரதிபலிப்பு மட்டுமே.

வளர்ச்சி, இளைப்பு-உடலின் தன்மைகள், ஆத்மா அதே நிலையில் நீடிக்கிறது.

**8. கடல்** - எத்தனை அளவு நீரை நதிகள் கொணர்ந்து கொட்டினாலும், கடல் கரை புரளுவதில்லை, ஆற்று நீர் வற்றலாம், கடல் வற்றுவதில்லை. பரிபூரணம் அதன் இயல்பு.

**9. விட்டில் பூச்சி** - எவருடைய தூண்டுதலும் இல்லாமலேயே, தானே நெருப்பை நாடிச் சென்று நசித்துப் போகிறது. பெண் ஆசை என்னும் மோகத் தீயில் மனிதன்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


தன்னைத்தானே அழித்துக் கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

**10. குளவி** - புழுவைக் கொட்டிக் கொட்டியே, அந்தப் புழுவையும் குளவியாக மாற்றும் தன்மை. மனத்தில் மீண்டும் மீண்டும் மாதவனையே நினைக்கப் பழகி,'அந்தப் பரமனின் ஸ்வரூபத்தை அடைவது' என்ற வைராக்கியம்-மன உறுதி வரவேண்டும்.

**11. சிலந்தி** - தேவைப்படும்போது, சிலந்தி தனது உமிழ்நீரைக் கொண்டு வலை பின்னுகிறது. அதே வலையை, தான் வேண்டும் போது உள்ளிழுத்து விழுங்குகிறது. இறைவனின் சிருஷ்டி லீலையும் அதே போலத்தான். சிருஷ்டியில் உருவானதை பின்னர் தன்னிடமே லயப்படுத்திக் கொள்கிறான்.

**12. தேனீ** - கண்ணில்படும் ஒவ்வொரு மலரில் இருந்தும் சுறுசுறுப்பாகச் செயல்பட்டு சிறிது சிறிதாகச் சேகரிக்கும் தேனை, தேனீ ஓரளவுதான் உண்கிறது. உறிஞ்சிய பெரும்பகுதித் தேனை, கூட்டில் சேமித்து வைக்கிறது, தேவைக்கு அதிகமானதைச் சேமித்து வைக்கிறது. ஆனால் மொத்தத்தையும் பறி கொடுத்து விடுகிறது. ஞானி அன்றாட தேவைக்கு ஏற்ப யாசித்துப் பெற வேண்டும். சேமிக்கக் கூடாது.

**13. புறா**– குஞ்சுகளைப் பேணிக் காக்க அலைந்து திரிந்து இரையைத் தேடி வந்து ஊட்டுகிறது. வேடன் விரித்த வலையில் சிக்கி மாண்டு போகிறது.

மனைவி-மக்கள் மீது அபரிமிதமான பாசம் வைத்து சம்சாரத்தில் உழலும் மனிதனும் இப்படித்தான் பந்தத்தில் தன்னையே மாய்த்துக் கொள்கிறான்.

**14. குர்ரம் என்னும் பறவை** - மாமிசத் துண்டம் ஒன்றை அலகில் கவ்வியிருந்தபோது, பருந்தால் துரத்தப்பட்டு அல்லல்பட்டது. சமாளிக்க முடியாமல் அந்தத் துண்டத்தை நழுவவிட்டதும், பருந்து துரத்துவதை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


நிறுத்தியது. அந்தப் பறவையும் இதனால் உயிர் பிழைத்தது. உடமைகளை விடாப் பிடியாகப் பற்றினால், பாதகம் விளையும்.

**15. மீன்** - தூண்டில் முள்ளில் புழு, அந்தப் புழு மீதுள்ள ஆசையால் மீன் அந்த முள்ளில் சிக்கி அழிகிறது.(நாவின் ருசிக்கு அடிமைப் பட்டால், நாசத்தைத் தவிர்க்க முடியாது.)

**16. பாம்பு** - ஜன சஞ்சாரமற்ற இடங்களில் ஒதுங்கி வாழ்வது பாம்பிற்குப் பாதுகாப்பு. சாதனைகளில் ஈடுபடும் ஞானியும் தனியிடத்தில் ஒதுங்கி இருத்தல் நன்மை பயக்கும்.

**17. மலைப்பாம்பு** - இந்தவகைப் பாம்பு இனம் இரையைத் தேடிப் போவதில்லை. இருந்த இடத்தில் கிடைப்பதை விழுங்கி உயிர் வாழுகிறது. உணவு கிடைக்காதபோது பட்டினி இருப்பதையும் பழக்கப் படுத்திக் கொண்டு விடுகிறது. சாதகன் உணவிற்காக அலையக் கூடாது. சரீர தாரணைக்குத் தானாகக் கிடைக்கும் ஆகாரத்தில் திருப்தி அடைய வேண்டும்.

**18. மான்** - வேடன் எழுப்பும் இசையில் மயங்கி, அவன் விரித்த வலையில் வலியச் சென்று விழுகிறது, மான். மோகத்தின் பிடியில் அகப்படாமல் தற்காத்துக் கொள்ள வேண்டும்.

**19. யானை**- பெண்யானையின் ஈர்ப்பில், காட்டுயானை மனிதர்களால் தந்திரமாக வெட்டப்பட்ட குழியில் விழுந்து, பிடிபட்டு பின்னர் அடிமையாகி அவதிக் குள்ளாகிறது.

பெண் மோகத்தில் சுதந்திரத்தை இழக்கக் கூடாது

**20. பாலகன்** - தாயின் அரவணைப்பில், குதூகலமாகக் கவலைகள் அற்று, பரிபூரண ஆனந்தத்தில் திளைக்கும் மனநிலை. ஈசனிடம் மட்டுமே ஈர்ப்பு இருக்கப் பழகி, மனத்திலே குழந்தையின் கவலையற்ற ஆனந்த அநுபவத் தைப் பெற வேண்டும்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


**21. கன்னிகை** - மணம் செய்யும் வயதில் இருந்த ஒரு பெண், "வீட்டு வேலைகளில் ஈடுபடும்போது கைகளில் அடுக்கடுக்காக அணிந்திருந்த வளையல்கள் ஓசை எழுப்பினால் வீட்டுவாசற்புறம் அமர்ந்துள்ள மாப்பிள்ளை வீட்டார் தனது அடக்க குணத்தை சந்தேகிப்பார்களோ?' என அஞ்சினாள். எனவே வளையல்கள் அனைத்தும் களைந்து, அலுவலில் முனைந்தாள். கூட்டம் சேர்ந்தால், கூச்சல், சர்ச்சை, குழுப்பம் என விளைய வாய்ப்புகள் அதிகம், இனிது, இனிது, ஏகாந்தம் இனிது.

**22. வேசி** - பிங்களை என்பவள் ஒரு வேசி. தன்னைத் தேடி வந்தவர்களிடம் அதிகமாகப் பணம் கேட்பாள். கொடுக்காதவரை நிராகரித்து அனுப்பி விடுவாள். ஒரு முறை எவருமே அவளை நாடி வரவில்லை. அதனால் மனம் நொந்த பிங்களை,சிறிது சிந்தித்தாள்'பொருளாசையால் ஈனத் தொழிலில் ஈடுபட்டோமே!என வருந்தினாள், ஈசன் நினைவு வந்தது. அந்த நினைப்பில் அமிழ்ந்து, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, திருந்தி வாழ்ந்தாள், நற்கதி அடைந்தாள். சுயப் பரிசோதனையே, கடைத்தேற சரியான வழி!

**23. கொல்லன்**- கொல்லன் ஒருவன் தனது பட்டறையில் மும்முரமாக வேலையில் முழு மனத்தையும் செலுத்திக் கொண்டு இருந்தான். அப்போது அந்நாட்டு அரசன் அருகிலிருந்த சாலை வழியாகத் தனது படை, பரிவாரங்கள் சகிதம், வெகு ஆரவாரமாக் கடந்து சென்றான்,. "கருமமே கண்ணாயினராக' இருந்த கொல்லன் இவை எதையுமே கவனிக்க வில்லை! வெளி உலகத் தொடர்பற்று இறைநினைப்பில் ஆழ்ந்து, ஒருமுனைப்புடன் ஈடுபடும் ஞானி, இந்தக் கொல்லனிடம் பாடம் கற்கலாம்

**24. வேடன்** - ஒரு உலோபியைப் போல, தேனீக்கள் சேகரித்த தேனை, வேடன் கவர்ந்து சென்று விடுகிறான். அதே போல லோபியின் பொருளை மற்றவரே அனுபவிப்பர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


## தத்தாத்ரேயர் உபாசனை

வேதகாலத்திலிருந்து வாழ்ந்து வரும் வேதியர், பல புராண இதிகாச நிகழ்வுகளில் பங்கேற்று அடையாளம் காட்டியுள்ளார். வெவ்வேறு காலங்களில் மனித இனம் ஆன்மிக வழிகளில் முன்னேற்றம் காண பல வடிவங்களில் அவதாரமும் செய்து வருகிறார்.

முதலில் நம் கவனத்திற்கு வருவது கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்குள் நிகழ்ந்த அவதாரங்கள், அதிலும், “ ஸ்ரீ குரு சரித்திரம்” என்ற நூலில் விரிவாகக் கூறப்பட்ட தத்தர் வடிவங்கள் வாழ்க்கை வரலாறு, நமக்குக் கிடைத்துள்ளது. ஸ்ரீ ஸரஸ்வதி கங்காதர் என்பவர் மராத்தி மொழியில் எழுதியுள்ளார். இந்த நூலின் தமிழாக்கம் ஸ்ரீதத்ததாஸர் ஸ்ரீ வெங்காஜீ ராவ் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கன்னட மொழி வாயிலாக ஸ்ரீ எஸ்.வி. ரமணி என்பவராலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

மராத்தி மூலவடிவம் பெற்ற நூல், மகாராஷ்டிர மாநிலத்தில் மிகவும் பிரசித்தம்.

மேற்படி புத்தகத்தில் மொத்தம் 53 அத்தியாயங்கள். முதல் 52 அத்தியாயங்கள்- ஸ்ரீ பாத ஸ்ரீவல்லபர் பற்றிய விவரங்கள், ஸ்ரீ நரஸிம்ம ஸரஸ்வதி வாழ்க்கை மற்றும் பக்தரக்ஷண நிகழ்வுகள், புராண-இதிகாச நிகழ்வுகள், மனிதர் மேன்மை அடைய மேற்கொள்ள வேண்டிய நித்ய கர்மாக்கள் இவற்றை அடக்கியது. கடைசி 53-வது அத்தியாயம், 1 முதல் 52 வரை உள்ள பகுதிகளின் சுருக்கத்தைக் கூறுவதாக வடிவம் பெற்றுள்ளது. மொத்தத்தில் குரு பக்தி தரும், இக-பர மேன்மைகளை நல்கும் நூலாக இதனைக் காண்கிறோம்.

பயன் தரும் பாராயணப் புத்தகமாக, தத்த பக்தர் களிடையே பிரக்யாதி பெற்று விளங்கி வருகிறது.

அநாதியான அதேசமயம், அபூர்வமான அத்ரி, அநசூயை, அருட்சுதனின் ஆராதனை, காலப் போக்கிலே விரிவடைந்து விட்டது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

விளைவாக, இந்திய நாட்டின் வெவ்வேறு பகுதிகளில், அனேக ஸம்ப்ரதாயங்கள் உருவாகி நிலைத்துள்ளன.

அவற்றின் பெயர்கள் வருமாறு.

1. நாத ஸம்ப்ரதாயம்
2. மஹாநுபாவ ஸம்ப்ரதாயம்
3. சைதன்ய ஸம்ப்ரதாயம்
4. ஆனந்த ஸம்ப்ரதாயம்
5. ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் மற்றும் ஸ்ரீநரஸிம்ஹ ஸரஸ்வதி ஸம்ப்ரதாயம்
6 ஏதேனும் ஒரு முக்கிய மஹான் பெயரில் (உ-ம்)
   1. ஏகநாதர்
   2. வாசுதேவாநந்த ஸ்வாமி (டேம்பே ஸ்வாமி)
   3. ஸ்வாமி ஸமர்த்த( அக்கல் கோட் மகாராஜ்)
   4. பந்த் மகராஜ் பாலேகுந்த்ரீகர்
7. அவதார ஸம்ப்ரதாயம்
8. நாமதூன் ஸம்ப்ரதாயம்
9. மற்றவை-
   1. ஜைனர்கள் ' நேமிநாத்' என்ற பெயரில் தத்தரை வணங்குகின்றனர்

   2. முஸ்லீம்கள் ' பக்கீர்கள்' என மதிப்புடன் வழிபடும் சித்தர்களும் தத்தாத்ரேயர் எனக் கொள்ளலாம்- குறிப்பாக, அனைவரும் வழிபடும் ஸ்ரீ ஸாயிபாபா ஷீரடியில் உள்ள மசூதியில் இருந்த போது, மதபேதமின்றி அருள் செய்து வந்த காலத்தில், சில இந்து பக்தர்களுக்கு, ஸ்ரீதத்தர் ரூபத்தில் காட்சி தந்துள்ளார்.

## ஸ்ரீதத்தரின் உபாஸகர்கள் யாத்திரை மேற்கொள்ளும் புண்ணிய க்ஷேத்திரங்கள்

1.மாஹூர் - தத்தர் அவதரித்த தலம். பரசுராமரின் தாய் ரேணுகா தேவிக்கு இங்கு பிரத்யேகமாகத் தனிக் கோயில் உள்ளது-நான்டேட் ஜில்லா (மஹாராஷ்ட்ரா) நாகபுரியிலிருந்து 225 கி.மீ.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


2. சித்ரகூடம்-மாஹூர் போலவே தத்தர் அவதாரத் தல மாகக் கருதப்படுகிறது. அநசூயாதேவிக்கும் கோயில் உண்டு.

3. நாஸிக்- ஒரு முகத்துடன் காட்சி நல்கும் தத்தர் கோயில் உள்ளது.

4. கிர்னார்- மலைமேல் அமைந்த ஆலயம். 10000 படிகள் ஏறி-இறங்கிச் செல்ல வேண்டும். ஜூனாகட் அருகே உள்ள தலம்(குஜராத்)

5. பட்டகாவ் - காட்மாண்டு(நேபாளம்) அருகே உள்ளது. தத்தரது ஆலயம் ஒரே மரத்தை வெட்டி அந்த மரத்துண்டுகளாலேயே உருவானதாகக் கூறுகின்றனர்

6. பீட்டாபூர் - ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர்(கி.பி.1323-1353) பிறந்த தலம் (ஆந்திரா)

7. குர்வபூர்- ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் இருந்த இடம் (கர்நாடகம்)

8. லாட்கரஞ்சா- ஸ்ரீ நரஸிம்ம ஸரஸ்வதி, தமது ஒரு சாதுர்மாஸ்ய விரதத்தின் போது தங்கியிருந்த இடம். கிருஷ்ணா நதிக்கரை. பில்வடி என்னும் ரயில் நிலையத்திலிருந்து 10.கி.மீ ( மஹாராஷ்ட்ரா)

10. நரஸிம்ஹவாடி- (நரஸோபாசாவடி) ஸ்ரீ நரஸிம்ம ஸரஸ்வதி 12 ஆண்டுகள் வசித்த இடம். பஞ்ச கங்கா-கிருஷ்ணா நதிகளின் சங்கமக்ஷேத்ரம்- கோல் ஹாபூர் ஜில்லா (மஹாராஷ்ட்ரா)

11. காணகாபூர்- ஸ்ரீ நரஸிம்ம ஸரஸ்வதி 13 ஆண்டுகள் தங்கிய தலம். பீமா, அமரஜா நதிகளின் சங்கம க்ஷேத்திரம். குல்பர்கா(கர்னாடகம்) ரயில் நிலையத்திலிருந்து 40.கிமீ தூரத்தில் உள்ளது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


12.ஸ்ரீசைலம்- ஸ்ரீ நரஸிம்ம ஸரஸ்வதி முக்தி அடைந்த தலம் (ஆந்திரா)

13.வாரணாஸி - காசியில் கங்கைக் கரையில் கோயில் உள்ளது. நாரத் காட் என்றும், தத்தாரேயர் காட் என்றும், அந்த இடத்தை அடையாளம் கூறுகின்றனர் (உ.பி)

14.பாஞ்சாலேச்வர்- தத்தர் கோயில்-பீட்ஜில்லா (மஹாராஷ்ட்ரா)

15.நாராயண்பூர் - தத்தர் கோயில்-புனே- ஸதாரா நெடுஞ் சாலையிலிருந்து விலகி செல்லும் பாதையில் (சுமார்)18. கி.மீ. வழியில், உபரியாக திருப்பதி வேங்கடாசல பதியின் அழகான ஆலயம் காணலாம்.

16.தத்தகிரி- தத்தர் கோயில்- சத்குரு ப்ரம்மீ பூத ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ தத்தாவதார ஸ்வயம் ப்ரகாச பிரம்மேந்திர அவதூத ஸரஸ்வதி ஸ்வாமிகளால் ஆலயம் ஏற்பட்டது. (சேந்த மங்கலம், நாமக்கல் தாலுக்கா, சேலம் மாவட்டம்)

17.சேலையூர் - ஸ்கந்தாச்ரம வளாகம். ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளால் ஏற்பாடு செய்யப்பட்டு, இன்று தனி சந்நிதியில் தத்தாத்ரேயர் கோயில் கொண்டுள்ளார். சென்னையை அடுத்துள்ள தாம்பரத்திற்கு மிகச் சமீபம்.

18.புதுக்கோட்டை- ஜட்ஜ் ஸ்வாமிகள் அதிஷ்டானம். புதுக்கோட்டை. பெரிய அளவிலான தத்தாத்ரேயர் சிலை வடிவம் காணலாம்

19.சேங்காலிபுரம்- திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஊர். 'ஸ்ரீ தத்த குடீரம்' எனும் பெயரில், இங்கு தத்தாத்ரேயர் கோயில் அமைந்துள்ளது. ஸ்ரீ ராமானந்த ஸ்வாமிகளால் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள பாதம், தத்தரது

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


விக்ரஹம், கார்த்தவீர்யார்ஜுன யந்திரம், ஆகியவை உள்ளன.

20. மற்ற கோயில்கள்- மஹாராஷ்டிரா சுற்றுலா கையேடு ஒன்றில் கீழ்க்கண்ட ஊர்கள்க் குறிப்பிட காண்கிறோம்(1) மன்காவ்(2) சூலிபன்ஜன் (3) தௌலதாபாத் கோட்டை (4) ஹட்டிபேட்,(5) அக்கல் கோட்(6) ஸாரங்கல் கே கேடே(7) சோர்வாட்(8) தேவ்கட்(9) நெரூல்(நவிமும்பை)

## ஸ்ரீ தத்தாத்ரேயர் பெருமை கூறும் நூல்கள்

ஸ்ரீ தத்தாத்ரேயர் பற்றிய விவரங்களைத் தருவது

1. தத்த புராணம் - மூன்று பகுதிகள் அடங்கியது (அ) கர்ம காண்டம் (ஆ) உபாஸனா காண்டம் (இ) ஞான காண்டம்- இதன் மற்றொரு பெயர்- 'த்ரிபுரஸுந்தரீ ரஹஸ்யம்' அல்லது த்ரிபுரா ரஹஸ்யம்.
2. அவதூத கீதை- நாத ஸம்ப்ரதாயத்தவருக்கு முக்கிய பாராயண நூல்.
3. ஸ்ரீ குரு சரித்திரம் - மூலம்-மராத்தி மொழி.
4. ஸ்ரீமத் பாகவதம்-11-ஆம் ஸ்கந்தம்.
5. ஸ்ரீ தத்த ப்ரபோத்- மூலம் மராத்தி மொழி ஸ்ரீ விட்டல் அனந்தஸுத் காவ்டி போவா இயற்றியது. ( தமிழாக்கம் இருப்பதாகத் தெரியவில்லை)

மற்றும்

6. ஸ்ரீ குரு கீதை- தத்தரை உபாசனை செய்பவர் படித்துப் பாராயணம் செய்யும் புனித நூல். ஸ்ரீ ஸ்கந்த புராணம்- உத்தர காண்டத்தில் ஈச்வரன் பார்வதிக்குச் செய்த உபதேசம்

- ஜெய குரு தத்த-

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

## ஸ்ரீ தத்தாத்ரேயர்-தகவல் துளிகள்

1. ஒவ்வொரு ஆண்டும் நிகழும் மார்க்கசீர்ஷ பௌர்ணமி அன்று, தத்தர் அவதரித்த தினமாக, சக ஆண்டு பஞ்சாங்க விவரங்களைப் பின்பற்றுபவர்கள் கொண்டாடுவர். இந்த தத்த ஜெயந்தி, நமது பஞ்சாங்க முறைப்படி கார்த்திகை மாதம் பௌர்ணமி ஆகும். தத்தர் பிறந்தது, ஒரு புதன் கிழமை என்பது, ஒரு உபரித் தகவல்.

2. தத்தாத்ரேயரின் உபதேசங்களைக் கூறும் நூல் அவதூத கீதை. இந்த நூல், 271 சுலோகங்களைக் கொண்டது. 7 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இதன் வேறு பெயர்கள்-'தத்த கீதா', மற்றும் ' தத்த-கீதா-யோக சாஸ்திரம்.

3. பிரம்ம புராணத்தின்படி, அத்ரி-அநசூயா-தம்பதியருக்கு, அவர்கள் இறைவனை வேண்டிப் பிறந்த பெண் குழந்தை ஒன்றும் உண்டு. பெயர்-சுபத்ரேயி.

4. கன்யா குமரியில், தேவியின் பாதத் தடம் பதிந்த இடம் ஸ்ரீ பாதபாறையில் உள்ளது. அதே போல, தத்தாத்ரேயர் பாதத்தடம் பதிந்த இடம், குஜராத் மாநிலத்தில் ஜுனாகட் பகுதியில் உள்ள கிர்நார் மலைமேல் உள்ளது. 70-80 ஆண்டுகளுக்கு முன்பு வரை, இப்பாதத் தடங்களுக்கு மட்டுமே வழிபாடுகள் செய்யப்பட்டு வந்தன. பின்னர் தான், பளிங்கு விக்ரஹமும் பிரதிஷ்டை ஆகியுள்ளதாகத் தெரிகிறது.

5. கிர்நார்மலையைச் சுற்றி நடந்து வரும் தத்தர்அடியார்களும் உண்டு. நீண்ட மலைத் தொடரை வலம் வர 11-நாட்கள் ஆகும். ' பில்ஸ்' என அழைக்கப்படும் அப்பகுதி ஆதிவாசிகள் பலர், இந்த முறையை வேண்டுதலாக மேற் கொண்ட பின்னர், மலை ஏறி (சுமார் 10,000 படிகள்) தத்தரை தரிசிக்கின்றனர். - சமீபத்தில் யாத்திரை மேற் கொண்ட நண்பர் நேரில் கேட்டறிந்த தகவலிது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


6. தத்தரின் பிரதான சீடர்கள்-

1. கார்த்தவீர்யார்ஜுனன்
2. பரசுராமன்
3. யது மன்னன்
4. அலர்கா
5. ஆயு
6. பிரஹல்லாதன்

7. 'ஸ்ரீ குரு சரித்திரம்' என்னும் நூலை மராத்தி மொழியில் எழுதியவர், ஸ்ரீ ஸரஸ்வதி கங்காதர். இவரது தாய் மொழி, கன்னடம்.

8. நாத ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றுபவர்களின் பிரதான தெய்வம்- சிவபெருமான். விஷ்ணுவின் அம்சமாக இவர்கள் தத்தரை ஆராதிக்கின்றனர், ஆனால் மூல மந்திரம் ' ஓம் நமசிவாய''

9. நாதசம்ப்ரதாயத்தில் நான்கு முக்கிய பிரிவுகள் காணக்கிடைக்கின்றன- அவதூதர் என்ற பொதுப் பெயர் அனைத்துப் பிரிவினர்க்கும் உண்டு.

1.பிரம்மாவதூத்
2. சைவாவதூத்
3. வீராவதூத்
4. குலாவதூத்

10. வைணவர்கள் தத்தாத்ரேயரை ' அவதூதர்' என்று அழைப்பதில்லை. தத்தருக்கு துறவறம் நல்கிய குரு என்று எவரும் இல்லை. அவர் நாராயணபுரம் பெருமாள் சந்நிதியில் துறவிக் கோலம் பூண்டார்.

11. தத்தகுருவின் திருப்பாதங்களே, பல தலங்களில் பிரதான அபிஷேக ஆராதனைகளைப் பெறுகின்றன. பலகோயில்களில் கல்லில் பதிந்த இந்தப் பாதச் சுவடுகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V.Hariharan Collection, Sholinganallur, Chennai


அபிஷேகம் செய்த பின்னர், வெள்ளிக் கவசம் பூண்டு அலங்கரிக்கப்பட்ட பட்டாடைகள், மலர்கள் எனக் காட்சி நல்கும்.

12. நவநாதர்கள் (மகாராஷ்ட்ராவில் கொண்டாடப்படுபவர்)

1. பரலி வைஜநாதர் ( சிவ பெருமான்)
2. மச்சேந்திர நாதர் ( மச்சமுனி)
3. கோரக்ஷ நாதர் ( கோரக்கர்)
4. ஸ்ரீராஜா பர்த்ரு ஹரி ( பத்ரகிரியார்)
5. கஹினி நாதர்
6. ஜாலிந்தர் நாதர்
7. வடஸித்த நாதர்
8. ரேவண்ஸித்த நாதர்
9. பஸவன்ஸித்த நாதர்

13. இன்டர் நெட்டில் கிடைக்கும் தத்தாத்ரேயர் பற்றிய விபரங்கள் http://en.wikipedia.org/wiki/ dattatraya"

14. சேந்தமங்கலம், ஸ்ரீ தத்தாச்ரமத்தில் உள்ள தத்த பாதம், ஔதும்பர விருக்ஷம் மற்றும் கணபதியை 21 முறை சுற்றி வந்தால், நினைத்த நல்ல காரியங்கள் கைகூடும். கிர்நார் மலையிலுள்ள தத்த பாதுகை தரிசனத்திற்கு இணையான பலன் கிட்டும்.

15. சமஸ்க்ருத மொழியில் ஸ்ரீ வாஸுதேவானந்த ஸரஸ்வதி ( ஸ்ரீ டேம்பே ஸ்வாமி) இயற்றிய ஸ்ரீ குரு சரிதம், 25 அத்தியாயங்கள் கொண்டது. அதில், 24-ஆம் அத்தியாயம், யோக ரஹஸ்யம் விளக்கும் 43 சுலோகங்களும், 25-ஆம் அத்தியாயம் போத-ரஹஸ்யம் என்ற தலைப்பில் 44 சுலோகங்களும் உள்ளன.

"ஓம் தத்தாத்ரேயாய பரஸ்மை ப்ரஹ்மணே நம:"

---

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

# பகுதி - 2

# தத்தாத்ரேயர் தோத்திரங்கள்

ஓம் ஸாயிராம்

## 1. தத்தாத்ரேய காயத்ரீ

ஓம் தத்தாத்ரேயாய வித்மஹே அவதூதாய தீமஹி ।
தந்நோ தத்த ப்ரசோதயாத் ॥

ஓம் தத்தாத்ரேயாய வித்மஹே யோகீச்வராய தீமஹி।
தந்நோ தத்த ப்ரசோதயாத் ॥

ஓம் தத்தாத்ரேயாய வித்மஹே அத்ரி புத்ராய தீமஹி ।
தந்நோ தத்த ப்ரசோதயாத் ॥

ஓம் பரமஹம்ஸாய வித்மஹே அவதூதாய தீமஹி ।
தந்நோ தத்த ப்ரசோதயாத் ॥

ஓம் ஹம்ஸ ஹம்ஸாய வித்மஹே பரமஹம்ஸாய தீமஹி ।
தந்நோ தத்த ப்ரசோதயாத் ॥

ஓம் ஜெய குரு தத்த
ஸ்ரீ பாதவல்லப நரஸிம்ம ஸரஸ்வதி ஸ்ரீ குரு தத்தாத்ரேயாய நம:॥

## 2. ஸ்ரீ தத்த பாதுகா ஸ்தோத்ரம்

ப்ரஹ்மானந்தம் பரம ஸுக்ருதம் கேவலம் ஞான மூர்த்திம்
*விச்வாதீதம் ககன சத்ருசம் தத்வ மஸ்யாதி லக்ஷ்யம் ।
ஏகம் நித்யம் விமல மசலம் ஸர்வதீ ஸாக்ஷி பூதம்
பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் ஸத்குரும் தம் நமாமி ॥

நமோ குருப்யோ குரு பாதுகேப்யோ
நம: பரேப்ய: பரபாதுகாப்ய: ।

* 'த்வந்த்வாதீதம்' என்றும் பாடம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


ஆசார்ய ஸித்தேச்வர பாதுகேப்யோ
நமோஸ்து லக்ஷ்மீபதி பாதுகாப்ய: ॥
க்ருஷ்ணாவேணீ பஞ்சகங்கா யுதிஸ்தம்
ஸ்ரீபாதம் ஸ்ரீவல்லபம் பக்த ஹ்ருத்ஸ்தம் ।
தத்தாத்ரேயம் பாதுகா ரூபிணம் தம்
வந்தே வித்யாம் சாலினீம் ஸங்க்ருணந்தம் ॥

–ஓம் ஜெயகுரு தத்த–

## 3. ஸ்ரீ குரு தத்த ஜெய லாபாதிகர ஸ்தோத்ரம்

தத்தாத்ரேயம் மஹாத்மானம் வரதம் பக்த வத்ஸலம் ।
ப்ரபந் நார்த்தி ஹரம் வந்தே @ஸ்மர்த்தகாமி ஸநோவது॥ 1

தீனபந்தும் க்ருபா ஸிந்தும் சர்வ காரண காரணம் ।
ஸர்வ ரக்ஷாகரம் வந்தே ஸ்மர்த்தகாமி ஸநோவது ॥ 2

ச’ரணாகத தீனார்த்த பரித் த்ராணாய பராயணம் ।
நாராயணம் விபும் வந்தே ஸ்மர்த்தகாமி ஸநோவது ॥ 3

ஸர்வாநர்த்தஹரம் தேவம் ஸர்வமங்கள மங்களம் ।
ஸர்வ க்லேசஹரம் வந்தே ஸ்மர்த்தகாமி ஸநோவது ॥ 4

ப்ரம்மண்யம் தர்ம தத்வக்ஞம் பக்த கீர்த்தி விவர்த்தனம் ।
பக்தாபீஷ்ட ப்ரதம் வந்தே ஸ்மர்த்தகாமி ஸநோவது ॥ 5

சோஷணம் பாப பங்கஸ்ய தீபனம் ஞான தேஜஸஹ ।
தாபப் ப்ரஸமனம் வந்தே ஸ்மர்த்தகாமி ஸநோவது ॥ 6

ஸர்வரோக ப்ரஸமனம் ஸர்வபீடா நிவாரணம் ।
விபதுத்தரணம் வந்தே ஸ்மர்த்தகாமி ஸநோவது ॥ 7

@ 'ஸ்மர்த்ரு காமி ஸமாவது' என்றும் பாடம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


ஜன்ம ஸம்ஸார பந்தக்னம் ஸ்வரூபானந்த தாயகம் ।
நிஸ்ரேய ஸம்பதம் வந்தே ஸ்மர்த்தகாமி ஸநோவது ॥ 8
ஜெயலாப யசக் காமஹ தாதூர் தத்தஸ்ய ஸ்தவம் ।
போக மோக்ஷ பிரதாஸ்யம் ப்ரகடித ஸுக்ருதோ பவேத் ॥ 9

—ஓம் ஜெய குரு தத்த—

## 4. ஸ்ரீ தத்த பஞ்சர:

ஓம் நமோ பகவதே தத்தாத்ரேயாய,
மஹாகம்பீராய, வைகுண்டவாஸாய
சங்க சக்ர கதா த்ரிசூல தாரிணே,
வேணுநாதாய, துஷ்ட ஸம்ஹாராய
சிஷ்ட பரிபாலகாய, நாராயணாஸ்த்ர தாரிணே சித்ரூபாய—
பிரஹ்ம ஞான பிரஹ்ம மஹா வாக்யாய,
ஸகல கர்ம நிர்மிதாய, சச்சிதானந்தாய
ஸகல லோக ஸஞ்சாரணாய,
ஸகல தேவதா வசீகரணாய
ஸகல ராஜ வசீகரணாய
ஸகல போக வசீகரணாய
லக்ஷ்மி ஐஸ்வர்ய ஸம்பத்கராய—
மம, மாத்ரு பித்ரு ஸதி ஸகோதர
விருத்திகாரய, குடோதக கலசபூஜாய,
அஷ்டதள பத்ம பீடாய, பிந்து மத்யே
லக்ஷ்மி நிவாஸாய, அஷ்ட தள பந்தனாய
சதுர்த்வார பந்தனாய, ருக் யஜுஸ் ஸாம
அதர்வண ப்ரணவ ஸமோதாய
உதாத்தா அனுதாத்தா ஸ்வரித ப்ரசயாய
காயத்ரீ, ஸாவித்ரீ ஸரஸ்வதி தேவதாய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai 

அவதூதாச்ரமயாய, அஜபா காயத்ரீ சமேதாய—ஸகல ஸம்பத்கராய, பரமந்த்ர, பரயந்த்ர, பரதந்த்ரோச்சாடனாய, ஆத்ம மந்த்ர, ஆத்ம யந்த்ர ஆத்ம தந்த்ர ஸ்மரக்ஷணாய, ஸதோசித ஸகல மதஸ்தாயிதாய ஸத்குரு தத்தாத்ரேயாய நமோ நம: ||

—ஓம் ஜெய குரு தத்த—

## 5. ஸ்ரீ அநசூய த்யானம்

அநசூயாம் ஸ்மரேத் தேவீம் புரஸ்தாத்ரி பாதாம்புஜாம்
கடீதடலஸ்த் தாத்ரேய ஸித்யேச்வராஞ்சிதாம் ||

பாணிப்யாம் பல்லவா பாப்யாம் பர்த்துரத்ரேர் மஹாமுநே:
பாத ஸேவாம் ப்ரகுர் வந்தீம் ஸாதரம் பதிதேவதாம் ||

குர்யாத ஸுவாஸிநீ பூஜாம் பதிபுத்ர ஸமன்விதாம்
இமம் மந்த்ரம் ஜபித்வாதௌ தத்தாத்ரேய மநும் ஜபேத் ||

பிரஸந்நோ ஜாயாதே சீக்ரம் தத்தாத்ரேயோ திகம்பர:
ப்ரஸீதத்யநஸுயா ச லக்ஷ்மீஸ் திஷ்டதி தத்க்ருஹே ||

— ஓம் ஜெய குரு தத்த —

## 6. நாரதமுனிவர் இயற்றிய தத்தாத்ரேய ஸ்துதி

ஜடாதரம் பாண்டுரங்கம் சூலஹஸ்தம் க்ருபாநிதிம்
ஸர்வ ரோகஹரம் தேவம் தத்தாத்ரேய மஹம் பஜே || 1

ஜகதுத்பத்தி கர்த்ரேச ஸ்திதி ஸம்ஹார ஹேதவே
பவபாச விமுக்தாய தத்தாத்ரேய நமோஸ்துதே || 2

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri Hari ... Collection, Sholinganallur, Chennai

ஜராஜன்ம விநாசாய தேக சுத்தி கராய ச
திகம்பர தயாமூர்த்தே தத்தாத்ரேய நமோஸ்துதே ॥ 3

கர்ப்பூர காந்தி தேஹாய பிரஹ்ம மூர்த்தி தராய ச
வேத சாஸ்த்ர பரிக்ஞாய தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 4

ஹ்ரஸ்வ தீர்க்க க்ருச ஸ்தூல நாம கோத்ர விவர்ஜித
பஞ்ச பூதைக தீப்த்தாய தத்தாத்ரேய நமோஸ்துதே ॥ 5

யக்ஞ போக்த்ரேச யக்ஞாய யக்ஞ ரூப தராய ச
யக்ஞ ப்ரியாய ஸித்தாய தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 6

ஆதௌ பிரஹ்மா மத்யே விஷ்ணு: அந்தே தேவஸ் ஸதாசிவ
மூர்த்தி த்ரயஸ்வரூபாய தத்தாத்ரேய நமோஸ்துதே ॥ 7

போகாலயாய போக்யாய யோக யோக்யாய தாரிணே
ஜிதேந்த்ரிய ஜிதக்ஞாய தத்தாத்ரேய நமோஸ்துதே ॥ 8

திகம்பராய திவ்யாய திவ்யரூப தராய ச
ஸதோதித பரப்ரஹ்ம தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 9

ஜம்பூத்வீபே மஹாக்ஷேத்ரே மாதாபுர நிவாஸிநே
ஜயமான ஸதாம் தேவ தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 10

பிக்ஷாடனம் க்ருஹேக் ராமே பாத்ர ஹேம மயம் கரே
நாநாஸ்வாத மயீ பிக்ஷா தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 11

பிரஹ்மக்ஞானமயீ முத்ரா வஸ்த்ரேச ஆகாச பூதலே
பிரக்ஞானகனலோதாய தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 12

அவதூத ஸதானந்த பரப்பிரஹ்ம ஸ்வரூபிணே
விதேஹ தேஹ ரூபாய தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 13

ஸத்யரூப ஸதாசார ஸத்ய தர்ம பராயண
ஸத்யாச்ரய பரோக்ஷாய தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 14

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


சூலஹஸ்த கதா பாணே வனமாலா ஸுகந்தர
யக்ஞ ஸுத்ரதரப் பிரஹ்மன் தத்தாத்ரேய நமோஸ்துதே॥ 15

க்ஷராக்ஷர ஸ்வரூபாய பராத்பர தராய ச
தத்த முக்திபர ஸ்தோத்ர தத்தாத்ரேய நமோஸ்துதே ॥ 16

தத்த வித்யாட்ய லக்ஷ்மீச தத்த ஸ்வாத்ம ஸ்வரூபிணே
குண நிர்குண ரூபாய தத்தாத்ரேய நமோஸ்துதே ॥ 17

சத்ரு நாசகர ஸ்தோத்ரம் ஞான விஞ்ஞான தாயகம்
ஸர்வபாபம் சமன்யாதி தத்தாத்ரேய நமோஸ்துதே ॥ 18

இதம் ஸ்தோத்ரம் மஹத் திவ்யம் தத்தப் பிரத்யக்ஷ காரகம்
தத்தாத்ரேய ப்ரஸாதேன நாரதேன ப்ரகீர்த்திதம் ॥

– ஓம் ஜெய குரு தத்த –

ஸ்ரீ குரோஹோ பரதரம் நாஸ்தி । நாஸ்தி தத்வம் பரம் குரும் ।

## 7. ஸத்குரு த்யானம்

பாலார்க்க ப்ரபமிந்த்ர நீலஜடினம் பஸ்மாங்க ராகோஜ்வலம்
சாந்தம் நாதவிலீன சித்த பவனம் சார்த்தூல சர்மாம்பரம்
ப்ரம்ஹைஞ சனகாதிபி: பரிவ்ருதம் ஸித்தை: ஸமாராதிதம்
தத்தாத்ரேயம் சமுபாஸ்மஹே ஹ்ருதிமுதா த்யேயம் சதா
யோகிபி:॥

–ஓம் ஜெய குரு தத்த–

## 8. கோர கஷ்டோத்தரண ஸ்ரீ தத்த ஸ்தோத்ரம்

ஸ்ரீபாத ஸ்ரீ வல்லப த்வம் ஸ்வதைவ
ஸ்ரீதத்தா அஸ்மான் பாஹி தேவாதி தேவா ।
பாவாக்ராஹ்ய க்லேச ஹாரின் ஸுகீர்த்தே
கோராத் கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே ॥ 1

த்வம் நோ மாதா த்வம் பிதாதோ அதிபஸ்த்வம்
த்ராதா யோகக்ஷேம க்ருத் ஸத்குருஸ்த்வம் ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Harihaan Collection, Nanganallur, Chennai

த்வம் ஸர்வஸ்வம் நோ ப்ரபோ விச்வமூர்த்தே
கோராத் கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே ॥ 2

நான்யஸ்த்ராதா நாபி தாதா ந கர்தா
த்வத்தோ தேவம் த்வம் சரண்யோ ரோகஹர்த்தா ।
குர் வாத்ரே அநுக்ரஹம் பூர்ண ராதே
கோராத் கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே ॥ 3

பாபம் தாபம் வ்யாதி மாதிம் ச தைர்யம்
பீதிம் க்லேசம் த்வம் ஹரா சுத்த தைன்யம் ।
த்ரா தாரம் நோ வீக்ஷ ஈசாஸ்தே ஜனார்த்தே
கோராத் கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே ॥ 4

தர்மே ப்ரீதிம் ஸந்மதிம் தேவ பக்திம்
ஸத்ஸங்காப்திம் தேஹி முக்திம் ச பக்திம் ।
ப்ாவா சக்திம் சாகிலானந்த மூர்த்தே
கோராத் கஷ்டாத் உத்தராஸ்மான் நமஸ்தே ॥ 5

ச்லோக பஞ்சக மேதத் யோலோக மங்கள வர்த்தனம் ।
ப்ரபடேன் நியதோ பக்த்யா ச ஸ்ரீ தத்த ப்ரியோ பவேத் ॥

இதி ஸ்ரீ கோர கஷ்டோத்தரண ஸ்ரீ தத்த ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்

– ஜெய குரு தத்த –

## 9. த்யானம்

த்ருத்வா கமண்டலும் கரே தரடங்க மாலிகாம் ।
கௌபீனம்–மௌஜி–புஜ சாஸ்த்ர–முகத்ரிகேசவம் ॥
நித்யம் ஹி வாஸ ஔதும்பர சாயிம் ஸ்ரீஹரே ।
தத்தாத்ரேய சரணம் மாம் பவ பாரகாரக ॥

ஸ்ரீ தத்தாத்ரேய மஹா முனயே நம:
ஸ்ரீ ஞானானந்த பரப்ரஹ்மணே நம:

– ஜெய குரு தத்த –

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


# 10. ஸ்ரீ ப்ருகு விரசித ஸ்ரீ தத்த ஸ்தோத்ரம்

**ஸ்ரீ கணேசாய நம:**

பாலார்க்க ப்ரபமிந்த்ரநீல ஜடிலம் பஸ்மாங்கராகோஜ்வலம்
சாந்தம் நாதவிலீன சித்தபவனம் சார்தூல சர்மாம்பரம்।
ப்ரஹ்மனை: ஸனகாதிபி: பரிவ்ருதம் ஸித்தை: ஸமாராதிதம்
ஆத்ரேயம் ஸமுபாஸ்மஹே ஹ்ருதி முதா
த்யேயம் ஸதா யோகிபி: ॥ 1

திகம்பரம் பஸ்மவிலேபிதாங்கம்
சக்ரம் த்ரிசூலம் டமரும் கதாம்ச ।
பத்மாஸனஸ்தம் சசி சூர்யநேத்ரம்
தத்தாத்ரயம் த்யேயமபீஷ்ட ஸித்யே ॥ 2

ஓம் நமோ ஸ்ரீகுரும் தத்தம் தத்ததேவம் ஜகத்குரும் ।
நிஷ்களம் நிர்குணம் வந்தே தத்தாத்ரேயம் நமாம்யஹம்॥ 3

ப்ரஹ்மா லோகேச பூதேச சங்க சக்ர கதாதரம் ।
பாணிபாத்ரதரம் தேவம் தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 4

ஸுரேச வந்திதம் தேவம் த்ரைலோக்ய லோகவந்திதம் ।
ஹரிஹராத்மகம் தேவம் தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 5

நிர்மலம் நீலவர்ணம் ச ஸுந்தரம் ச்யாம சோபிதம் ।
ஸுலோசனம் விசாலாக்ஷம் தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 6

த்ரிசூலம் டமரும் மாலாம் ஜடாமுகுடவந்திதம் ।
மண்டிதம் குண்டலம் கர்ணே தத்தாத்ரேயம் நமாம்யஹம்॥7

விபூதி பூஷிதம் தேஹம் ஹாரகேயூர சோபிதம் ।
அனந்த ப்ரணவாகாரம் ஸ்ரீ தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 8

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai


ப்ரஸன்னவதனம் தேவம் புக்திமுக்தி ப்ரதாயகம் ।
ஜனார்தனம் ஜகத்த்ராணம் தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 9

ராஜராஜம் மிதாசாரம் கார்த்தவீர்ய வரப்ரதம் ।
ஸுபத்ரம் பத்ரகல்யாணம் தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 10

அநசூயா ப்ரியகரம் அத்ரிபுத்ரம் ஸுரேச்வரம் ।
விக்யாதயோகினாம் மோக்ஷம் தத்தாத்ரேயம் நமாம்யஹம்॥11

திகம்பரதனும் ச்ரேஷ்டம் ப்ரஹ்மசர்ய வ்ரதே ஸ்திதம்।
ஹம்ஸம் ஹம்ஸாத்மகம் நித்யம் தத்தாத்ரேயம் நமாம்யஹம்॥12

கதாயோகீ கதா போகீ பாலலீலா வினோதக: ।
தசனை: ரத்ன சங்காசை: தத்தாத்ரேயம் நமாம்யஹம்॥ 13

பூதபாதா பவத்ராஸ: க்ரஹபீடா ததைவச ।
தரித்ர வ்யஸன த்வம்ஸீ தத்தாத்ரேயம் நமாம்யஹம்॥ 14

சதுர்தச்யாம் புதே வாரே ஜன்ம மார்க்கசிரே சுபே ।
தாரகம் விபுலம் வந்தே தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 15

ரக்தோத் பலதலம் பாதம் ஸர்வதீர்த்த ஸமுத்பவம்।
வந்திதம் யோகிபி: ஸர்வை: தத்தாத்ரேயம் நமாம்யஹம்॥ 16

ஞானதாதா ப்ரபு: ஸாக்ஷாத் கதிர்மோக்ஷ ப்ரதாயினே ।
ஆத்மபூரீச்வர: கிருஷ்ண: தத்தாத்ரேயம் நமாம்யஹம் ॥ 17

ப்ருகு விரசிதமிதம் தத்தாத்ரேய பராயணான்விதம் ।
ஸாக்ஷாத் யத் வத் ஸ்வயம் ப்ரஹ்மா தத்தாத்ரேயம்
நமாம்யஹம் ॥ 18

ப்ராணினாம் ஸர்வ ஜந்தூனாம் கர்மபாச ப்ரபஞ்ஜனம்।
தத்தாத்ரேய ஸ்துதி ஸ்தோத்ரம் ஸர்வான் காமான்
